# எல்க்கானா
# பக்தியுள்ள ஒரு தந்தை
## (1:1-2:21)

*"தந்தையின்" பணிப்பொறுப்பு கனத்த கட்டுப்பாடுகளினால் சுமை யூட்டப்பட்டுள்ளது. குடும்பம் என்ற அலகின் மீது தந்தையின் பணிப் பொறுப்பானது பிரதானமான செல்வாக்கைக் கொண்டுள்ளது என்று சமூக வியல் ஆராய்ச்சிப் படிப்புகளினால் காண்பிக்கப்பட்டுள்ளது. பிள்ளையின் உணர்வுப்பூர்வமான, சமுதாய மற்றும் மதம் சார்ந்த நலன்கள் யாவும் பெரும்பாலும் குடும்பத்தில் தந்தையின் பணிப் பொறுப்பினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. பிள்ளையின் கண்கள் தந்தையை பயபக்தி யுடனும் தன்னம்பிக்கையுடனும் நோக்குகின்றன. பிள்ளையானவன், "எனது தந்தையால் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும்" என்று பெருமையடித்துக் கொள்கின்றான். இவ்விதமான குழந்தைத்தனமான கண்ணோட்டம், தந்தையின் முக்கியத்திற்கு ஒரு முழுமையான விளக்கவுரையாய் இருக்கிறது. பின்வரும் கவிதையானது தந்தையின் மீது இன்னும் வலியுறுத்தத்தைக் கூட்டுகின்றது:*

*எனது தந்தையாயிருக்க ஒரு மனிதரை நான் வாங்கச் சென்றால்,*
*பின்வரும் பண்புகள் கொண்டவரையே நான் வாங்குவேன்:*
*ஒரு சிறு பையனின் "ஏன்?" என்ற கேள்விகளுக்கு எப்பொழுதும்*
*பொறுமையாய் நின்று பதில் அளிப்பவர்,*
*சிறுமியிடத்திலோ அல்லது சிறுவனிடத்திலோ இரக்கத்துடன்*
*பேசுபவர்,*
*சற்றே வெளிச்சக் கீற்றையும் சந்தோஷத்தையும் தருபவர்.*

*வேதாகமத்தின் பொன் விதியைப் பின்பற்றுகின்ற*
*மற்றும் சபை ஆராதனைக்கும் வேதாகமப் பள்ளிக்கும்*
*ஒழுங்காகச் செல்லும் ஒரு தந்தையை*
*நான் தேர்ந்தெடுத்துக் கொள்ள நான் விரும்புவேன்.*
*எங்கள் குடும்ப மரத்தில் சேர்ந்துக் கொள்வதற்கு நான்,*
*மிகவும் நேர்த்தியான தந்தை ஒருவரை வாங்குவேன் -*
*பின்பு அவர் என்னைக் குறித்துப் பெருமை பாராட்டும்படிக்கு*
*நான் அவரைப் போல வாழ முயற்சி செய்வேன்!*

தேவன் மனிதனை "தந்தை" என்ற ஸ்தானத்தில் வைத்து அவனுக்குத் தந்தைக்குரிய தொடர் கடமைகளைக் கொடுத்த போது, தந்தை என்பவர்

*‘‘பக்தி’’ உடையவராய் இருக்க வேண்டும் என்று அவர் நோக்கங் கொண்டார். யாரோ ஒருவர், ‘‘உண்மை பக்தி என்பது ஆத்துமாவில் ஒழுங்கமைவின் கொள்கையாக உள்ளது-இது எப்பொழுதும் அதை (ஆத்துமாவை)த் தாங்கி நிற்கக் கூடிய பலம் மிக்க மற்றும் வனப்பு மிக்க அச்சாகவும் ஆகாயங்களின் இசையுடன் இணைவுற்றவைகளாகவும் உள்ளது. இது தேவனுடைய அரியணையைச் சுற்றிலும் மெதுவாகச் சுற்றி வருமாறு காத்துக் கொள்ளுகின்ற மாபெரும் விதியைப் போன்றுள்ளது.” பயபக்தியுள்ள ஒரு நபர் தேவனுக்குரிய நபராக உள்ளார். பயபக்தியுள்ள ஒரு நபர், ஒவ்வொரு செயலிலும் தேவனை முதலிடத்தில் வைக்கின்றார்! தந்தைக்குரிய பண்புகளில் இதுவே இன்றியமையாததாக உள்ளது!*

*எல்க்கானா தேவபக்தியை நன்கு விவரிக்கின்றார். அவரை விவரிப் பதற்கு “தேவபக்தி” என்பதை விட தகுதியான சொற்றொடர் வேறு எதுவும் இல்லை. அவருடைய விசுவாசம் பலமுள்ளதாகவும், அவரது வாழ்வின் செயல்பாடுகள் யாவற்றையும் ஆளுகை செய்து அளப்பதாகவும் இருந்தது. எந்தப் பிள்ளையும் விரும்பக் கூடிய வகையிலான தந்தையாக அவர் இருந்தார்.*

*வரலாற்று ரீதியாக எல்க்கானாவைப் பற்றிப் பின்வரும் விஷயங்கள் அறியப்படுகின்றன. அவர் கானானில் குடியமர்ந்தவர்களின் ஐந்தாவது தலைமுறையில் இருந்தார். அவர் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவராகவும், எப்பிராயீமின் எல்லைப் பகுதிகளில் இராமா என்ற ஊரில் வாழ்ந்தவராக வும் இருந்தார். அவரைப் பற்றி வேத வசனம் கூறுகின்ற யாவும் 1:1-2:21ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் இரண்டு மனைவிகளைக் கொண்டிருந் தார், இது பழைய (ஏற்பாட்டு) நியாயப்பிரமாணங்களின் கீழ் அனுமதிக்கப் பட்டிருந்தது (உபா. 21:15). ஆசரிப்புக் கூடாரத்தில் பெருந்தன்மையுடன் காணிக்கை செலுத்துதலுடன் (1:24) கூடிய இந்த உண்மையானது அவர் ஒரு செல்வந்தர் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது. பலதார திருமணம் என்பது மோசேயின் பிரமாணத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், அது தேவனால் கட்டளையிடப்படாததாகவும், அது நடைமுறைப் படுத்தப்பட்ட இடங்களில் எல்லாம் குடும்ப உறவுகளை அழிப்பதாகவும் இருந்தது!*

*எல்க்கானா, தேவன் மீதுள்ள பலத்த விசுவாசத்தில் நிலைநாட்டப் பட்ட மாபெரும் பண்புகளைக் கொண்ட மனிதராயிருந்தார். இது, யெகோவாவுக்குச் செய்யப்பட்ட ஆராதனையானது அசாதாரணமாயிருந்த காலகட்டத்தில் நியாயாதிபதிகளின் காலத்தில் அவர் வாழ்ந்தபடியினால் குறிப்பிடத்தக்கதாயிருந்தது. பக்தியுள்ள இந்தத் தந்தை பற்றிய விரைவான இந்த வெளிப்படுத்துதலில் இருந்து, மிகவும் உணர்வில் பதியக் கூடியதான அவரது வாழ்வின் கண்ணோட்டம் ஒன்றை நாம் ஆதாயப்படுத்திக் கொள்ள முடிகின்றது.*

## அவருடைய பயபக்திக்குப் பொறுப்பு வகிக்கும் காரணிகள்

*முதலாவது, எல்க்கானாவின் அன்றாட வாழ்வு முறை, அவரது பிள்ளைகளுக்கு முன்பாக தேவபக்தியைக் காட்சிப்படுத்தியது (1:3). அவர் புற இனத்தெய்வங்களை வழிபடுவதற்குப் பதிலாக யெகோவாவை ஆராதித்தார் (இ.வ. 7:4). ஒரே ஒரு தேவன் மாத்திரமே இருக்கிறார் என்பதை எல்க்கானா உணர்ந்தார், மற்றும் அவர் யெகோவாவை ஆராதிக்க நாடினார். எல்க்கானாவின் வாழ்வு, அவரது தர அளவையின்படியாக வாழும்படிக்கு அவருடைய பிள்ளைகளுக்கு அறைகூவல் விடுத்தது (இ.வ. யோபு. 1:15). அவர் தமது வீட்டில் ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றிப் பேசுகின்ற தந்தையாக இருந்தார் (1:23; உபா. 6:6-9). இப்படிப்பட்ட ஒரு தந்தை தனது வீட்டில் கொண்டிருக்கக் கூடிய செயல்விளைவைப் பற்றி நீங்கள் கற்பனை செய்து பார்க்க இயலுமா? எல்க்கானாவைப் போன்று பயபக்தியுள்ள தந்தையை ஆசீர்வாதமாகப் பெற்றுள்ள குடும்பம் மகிழ்ச்சி நிறைந்ததாகக் காணப்படும்! (ஆதி. 18:19).*

*மிசிசிப்பி என்ற நதியின் கரையில் ஒரு தந்தை வசித்து வந்தார். உலகம் அவரைச் செல்வந்தர் என்று அழைத்தது. ஒரு நாள் அவருடைய மூத்த மகனுக்குப் பயங்கரமான விபத்து ஒன்று நேர்ந்ததால், உணர்விழந்த நிலையில் தந்தையிடம் கொண்டு வரப்பட்டார். மருத்துவர் விரைவில் அழைக்கப்பட்டார். மகன் உயிர் பிழைப்பானா என்று தந்தை கேட்டார். "இல்லை, அவன் மரித்துக் கொண்டிருக்கின்றான், அவன் மீள முடியாது" என்பதே பதிலாக இருந்தது. அதற்குத் தந்தை, "அதை நாம் அவனிடத்தில் கூறும்படி அவனை உணர்வுக்குக் கொண்டு வர உங்களால் முடியுமா? அவன் மரித்துக் கொண்டிருப்பதை அறியாமலே மரிப்பதை நான் விரும்பவில்லை" என்று கூறினார். மருத்துவர் முயற்சி செய்தார், பையன் சற்று நேரத்திற்கு உணர்வடைந்தான். தந்தை "நீ மரித்துக் கொண்டிருப் பதாக மருத்துவர் கூறுகின்றார். அதை உன்னிடம் கூறாமல் நீ மரித்துப் போவதை என்னால் அனுமதிக்க இயலவில்லை" என்று கதறினார். பையன், "அப்பா, நீங்கள் எனக்காக ஜெபம் செய்ய மாட்டீர்களா?" என்று கேட்டான். தந்தை பேச்சற்றுப் போனார், ஆனால் கடைசியில் அவர் மென்மையாக, "என் மகனே, என்னால் ஜெபிக்க இயலாது" என்று அறிக்கை யிட்டார். பையன் உணர்விழந்தவனாக விழுந்தான், விரைவில் மரித்துப் போனான். அந்தத் தந்தை பல ஆண்டுகளாகத் தமது மகனுடன் இருந்தும் கூட அவனுக்காக ஒருமுறை கூட ஜெபித்திருந்ததில்லை என்பதே இந்தத் துன்பக் கதையின் கவலைமிகுந்த பாகமாக உள்ளது!*

*இரண்டாவது, தேவனுக்குக் கொடுத்த வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று எல்க்கானா தன் பிள்ளைகளுக்கு கவனமாய்ப் போதித்து வந்தார் (1:21). நியாயாதிபதிகளின் காலம் "பொருத்தனைகளின்" காலமா யிருந்தது, மற்றும் இங்கு இன்னுமொரு உதாரணம் உள்ளது. அநேகமாக இது அன்னாளின் வேண்டுகோளுடன் தொடர்புடையதாக இருந்தது. எல்க்கானா ஏற்படுத்தியிருந்த வாக்குத்தத்தம் பற்றி அவரது குடும்பத்தினர்*

*நிச்சயமாக அறிந்திருந்தார்கள். அவர்கள், தங்களின் தந்தை முதலாவது தேவனிடத்தில் வாக்குறுதியளித்ததையும், பின்பு அவற்றை காத்துக் கொண்டதையும் கண்டிருப்பார்கள், அதைப் பற்றி சிறிதளவே கூற வேண்டியதாக இருந்திருக்கும். எல்க்கானா தமது செய்கையினால் ஒரு மாபெரும் பாடத்தைப் பிரசங்கித்திருந்தார். தந்தையர்களே, தேவனிடத்தில் நீங்கள் வாக்குறுதிகளைக் காத்துக் கொள்வதை உங்கள் பிள்ளைகளுக்குக் காண்பிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கின்றீர்களா? உங்களின் உதாரணமானது வல்லமை மிகுந்த பிரசங்கமாக உள்ளது. உண்மையான தேவபக்தி, நீங்கள் தேவனோடு ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தங்களில் நேர்மையுடன் இருத்தல் என்பதுடன் தொடர்புடையதாக உள்ளது (1 யோவா. 2:6; சங். 1:1, 2; 116:17, 18; 2 இரா. 15:1-3; மற்றும் பிர. 5:2-6 ஆகியவற்றை வாசிக்கவும்).*

*மூன்றாவது, ஆராதனையில் கலந்து கொண்டு பங்கேற்கும்படி எல்க்கானா தம் குடும்பத்தை உற்சாகப்படுத்தினார் (1:4, 21). இங்கு ஆராதனையில் முறையாக இருக்கும் தந்தை இருக்கின்றார்! தம் கட்டுப்பாடு மற்றும் சிலாக்கியம் ஆகியவற்றினால் தூண்டப்பட்டிருந்த அவர், செல்லுவதற்கு ஆவலுடனிருந்தார். அவர் அதைக் கைவிடாதிருந்தார் (நெகே. 10:39; எபி. 10:25). அவர் வெகுதூரம் பயணம் செல்ல வேண்டியிருந்தது, ஆனால் அந்தச் சிரமம் அவரைத் தடை செய்து விடவில்லை. அவர் தம் குடும்பம் முழுதும் தன்னுடன் செல்வதை உறுதிப்படுத்திக் கொண்டதைக் கவனியுங்கள். தடையில்லாதிருந்த வேளையில் "அனைவரும்" சென்றனர் (1:21). ஆராதனை என்பது குடும்ப வேளையாகக் கருதப்பட்டது, மற்றும் அவர் ஆராதனையில் குடும்ப ஒருமைப்பாட்டை உற்சாகப்படுத்தினார். அவர் குடும்பம் முழுவதும் செல்வதற்குத் திட்டமிடுதல் தேவைப்பட்டது; பலிகளுக்கான அவரது அளிப்புகளுக்குத் தயாரிப்புகள் தேவைப்பட்டன. தந்தை என்ற வகையில் அவர் தேவனை ஆராதிக்கக் குடும்பத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் நிச்சயப்படுத்திக் கொள்வதில் வழிநடத்தினார்! தயாராயிருப்பதில் எது அவசியம் என்பது பற்றிய எண்ணப்போக்கு கொண்ட தந்தையாக அவர் திகழ்ந்தார். அவரது ஆராதனையில் வழிபாடு, அறிக்கையிடுதல், விண்ணப்பித்தல்கள், நன்றி செலுத்துதல்கள் ஆகியவை அடங்கியிருந்தன. அவரைப் பொறுத்த மட்டில் ஆராதனை என்பது இன்றியமையாததாக இருந்தது!*

*ஆராதனையில் இருந்து திரும்புகையில், பயபக்தி இன்னும் அவரது இருதயத்தை ஆட்சி செய்தது என்பதற்குச் சுட்டிக்காட்டுதல் ஒன்றுள்ளது (1:19). எல்க்கானா, ஆராதித்தல்கள் குறித்து அயர்வடையாமல், ஆனால் எல்லா வாய்ப்புக்களையும் அனுகூலப்படுத்திக் கொள்வதில் ஆர்வத்துடன் இருந்தார். அவருடைய எண்ணப்போக்கானது அவரது குடும்பத்திற்கு அறிவித்த ஆச்சரியமான செய்தியை நீங்கள் காண்கின்றீர்களா? தந்தையர்கள் (தங்கள் குடும்பத்துடன்) ஆராதனையில் இருந்து இல்லம் திரும்பும் போது கொண்டுள்ள நடக்கை பற்றி ஆழ்ந்து சிந்திப்பதில் நன்கு செயல்பட வேண்டும்; இப்படிப்பட்டவைகள் பிள்ளைகளை ஊக்கப்படுத்தும் (லூக். 11:28).*

*எல்க்கானா தனது பிள்ளைகள் ஆராதனையில் பங்கேற்பதை உற்சாகப் படுத்தினார் என்பதற்குச் சுட்டிக்காட்டுதல் ஒன்றுள்ளது (1:4). காணிக்கை செலுத்தப்படும், அதன் பிறகு, ஒரு பகுதியானது ஆராதிப்பவருக்குக் கொடுக்கப்படும். பண்டிகையொன்று ஆசரிக்கப்பட்டு, திரும்பக் கை வரப் பெற்ற பகுதி உண்ணப்படும். இந்த உணவு வேளையில் லேவியர்களும், ஏழைகளும், விதவைகளும் அழைக்கப்பட வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருந்தார் (உபா.16:11). ஆராதனையில் பங்கேற்பவர்கள் தங்கள் செயல்களைத் தேவனுக்கு ஆராதனை என்ற வகையில் கண்ணோக்க வேண்டியிருந்தது. இவ்விதமாக, இந்த வேளைகளில் எல்க்கானா தனது பிள்ளைகளை அங்கிகரிக்கப்பட்ட வழிமுறைகளில் ஆராதிக்கப் பயிற்று வித்துக் கொண்டிருந்தார் (எபே. 6:4). இன்றைய நாட்களில் தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தகுதியான முறையில் ஆராதிக்கப் பயிற்றுவிப்பதில் நேரம் செலவிட்டால் அது நல்லதாகும். ஆராதனை நடக்கையில் பிள்ளை கள் பெரும்பாலும் பயிற்சி பெறுவதில்லை, இதன் விளைவாக அவர்களின் ஆராதனையானது, வெறுமையும் வீணானதுமாயும் இருக்கின்றது!*

## *அவரது பயபக்தியான பண்பிலிருந்து விளைந்த கனிகள்*

*எல்க்கானாவின் பயபக்தியானது, அவர் தம் குடும்பத்துடன் உரை யாடிய வகையில் மட்டுமின்றி அவர் செயல்விளக்கப்படுத்திய பண்பினங் களிலும் கவனிக்கப்படக் கூடியதாக உள்ளது.*

*<u>முதலாவது, அவர் புரிந்து கொள்ளுதல் உடையவராயிருந்தார் (1:23).</u> அவர் புரிந்து கொள்ளுதல் உடையவராயிருந்தபடியினால் சலுகைகளை அனுமதித்தார். மிகச் சரியாக, கடுமையற்ற வகையில், அசைவற்ற நிலையில் உள்ள தந்தையர்கள் தங்கள் இல்லங்களில், எல்க்கானாவைப் போன்று அன்பின் நிறைவை ஒருக்காலும் மகிழ்வுடன் அநுபவிக்க மாட்டார்கள். தந்தையின் பயபக்தியானது அவரை எல்க்கானாவின் மென்மையான புரிந்து கொள்ளுதலுக்கு வழிநடத்தியிருந்ததென்றால், இன்றைய நாட்களில் பல இல்லங்கள் மேன்மை வாய்ந்ததாக இருந்திருக்கும். தந்தை என்பவர் கடுமை யானவராக, கண்டிப்புமிக்க, இணக்கமற்ற அதிகாரத்திலிருந்து தன்னைக் காத்துக் கொண்டு, எல்லா விஷயங்களிலும் தனித்தன்மையை உணர்ந் தறிந்து கொண்டால், இல்லம் சார்ந்த இணக்கம் சாத்தியமாகின்றது.*

*<u>இரண்டாவது, அவர் ஆவிக்குரிய விஷயங்கள் பற்றி ஆழமான அக்கறை கொண்டிருந்தார் (1:21).</u> ஒவ்வொரு ஆண்டிலும் (சீலோவிற்குப்) பயணம் மேற்கொள்ளுதல் என்பது நிச்சயமாக நடைபெறும். அவர், தேவனைப் பற்றித் தமது குடும்பத்தாரிடம் ஆழமான அக்கறையை அறிவித்த ஒரு தந்தையாக உள்ளார். எல்க்கானா அக்கறை கொண்ட எல்லா விஷயங் களிலும் ஆவிக்குரிய காரியங்கள் முன்னிலை வகித்தன!*

*<u>மூன்றாவது, அவர் தேவனைச் சார்ந்தவர் ஆனார் (1:23, 28).</u> அவர் குழந்தையாயிருந்த சாமுவேலை கண்ணோக்கிய வேளையில், தேவன் தனது மகனைக் காத்து, வளரச் செய்து, அவனை ஆசீர்வாதமாக இருக்கச்*

*செய்யும்படி ஜெபித்தார் (1:23). அது யாவும் தேவனுடைய கரங்களில் இருந்தது என்று அவர் அறிந்திருந்தார், மற்றும் அவர் தேவனை மனப்பூர்வமாகச் சார்ந்திருந்தார் (2:11). அன்னாளின் விருப்பமும் (1:28) எல்க்கானாவின் விருப்பம் போன்றதாகவே இருந்தது என்பது உறுதி. அவர்களின் பிள்ளை உயிருடன் இருக்கும் நாளெல்லாம் அவனைக் காப்பதற்கு அவர்கள் தேவனையே சார்ந்திருந்தார்கள்.*

*நான்காவது, அவர் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார் (2:20). இங்கு விதைத்தல் மற்றும் அறுத்தல் என்பவற்றின் கொள்கை (கலா. 6) நடைமுறைப்படுத்தப் படுகின்றது. சங்கீதம் 1ன் நீதியுள்ள மனிதர் தமது ஒப்புக்கொடுத்தல் உள்ள விசுவாசத்தினால் அதிகமானவற்றைப் பெற்றுக் கொண்டது போலவே, எல்க்கானாவும் தமது பயபக்தியினால் ஆசீர்வாதங் களை அறுவடை செய்தார். இதே விதமான பயபக்தியை விதைக்கின்ற தந்தையர்கள் இதே விதமான ஆசீர்வாதங்களை அறுப்பார்கள்.*

## முடிவுரை

*மனிதர்களே, நீங்கள் எந்த வகையிலான தந்தையர்களாக இருக்கின்றீர் கள்? நீங்கள் உங்கள் பிள்ளைகள் வாங்க விரும்பும் வகையிலான தந்தையர் களாயிருக்கின்றீர்களா? எல்க்கானா, தந்தைக்குரிய தனது அக்கறையை இயக்கக்கூடிய ஒரு பண்பை - பயபக்தியை - உடையவராயிருந்தார். அவர் தேவனுடன் ஒத்துழைப்பதற்கான தமது பொறுப்பு மற்றும் நீதியின் மார்க்கங்களில் தமது பிள்ளைகளைப் பயிற்றுவித்தல் ஆகியவற்றினால் மூழ்கடிக்கப்பட்டவராயிருந்தார்.*

*நீங்கள் ஒரு பயபக்தியுள்ள தந்தையாவதற்கு எல்க்கானாவின் இந்த உதாரணத்தைப் பயன்படுத்துங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக மதரீதியான உறுதிப்பாடுகளை அன்றாடம் காட்சிப்படுத்துங்கள். தேவனிடத்தில் செய்து கொண்ட வாக்குறுதிகள் யாவற்றையும் காத்துக் கொள்வதன் அவசியத்தை உங்களுடைய பிள்ளைகளுக்குக் காண்பிப்பதில் கவனமாயிருங்கள். தேவனுக்கு உண்மையான ஆராதனை செய்வதில் பங்கேற்கும்படி உங்கள் குடும்பத்தை உற்சாகப்படுத்துங்கள்.*

*எல்க்கானா, 2:21க்குப் பிறகு, காட்சியில் இருந்து மறைந்து போகின் றார். ஆனால் தமது பிந்திய ஆண்டுகளில் (மீண்டும்) காட்சியளிக்கின்றார். ஒருவேளை, சாமுவேல் இராமாவுக்குத் திரும்பவும் வந்து சேர்ந்த பொழுது, அவருடைய பெற்றோர்கள் இன்னும் உயிருடன் இருந்திருக்கலாம். அப்படியிருந்தால், அவர் (அவர்களின்) அருகிலேயே வாழ்ந்திருப்பார். சாமுவேலின் மகன்கள் எல்க்கானாவைப் பயபக்தி நிறைந்த ஒரு தாத்தாவாக அறிந்திருப்பார்கள்! என்ன ஒரு மேன்மை மிகுந்த எண்ணம்! ஒவ்வொரு தந்தையும் எல்க்கானாவைப் போலிருக்க முயற்சி செய்து, பயபக்தியுள்ள தமது தந்தைத்துவத்தினிமித்தம் அறியப்படுவார்களாக!*